AL/2021/51-T-1

முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

51 T I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2021
**General Certificate of Education (Adv. Level) Examination, 2021**

| சித்திரக் கலை I<br>**Art I** | முன்னோடிப் பரீட்சை<br>**Pilot exam** | மூன்று மணித்தியாலம்<br>**Three Hour** |
|---|---|---|

சுட்டெண் :................................................

**அறிவுறுத்தல்கள்:**

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

பகுதி II

- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியில் இருந்து **இரு** வினாவும், 'ஆ', 'இ' பகுதிகளில் தலா **ஒரு** வினா வீதம் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.
- பகுதி I, பகுதி IIஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கைளிக்குக.

## பகுதி I

- 1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** A,B,C,D,E எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.



A




B



C



D



E

01. A எழுத்தினால் குறிக்கப்படும் சிறுபுடைப்புச் செதுக்கலானது,

1. இசுறுமுனியா விகாரையில் சுவரில் காணப்படுகின்றது.
2. எம்பக்கே தேவாலயத்தின் தூணில் காணப்படுகின்றது.
3. யாப்பகூவ படிவரிசையில் காணப்படுகின்றது.
4. பொலநறுவை வட்டதாகே அடித்தளத்தில் காணப்படுகின்றது.
5. பனாவிட்டிய அம்பலத்தில் உள்ள தூணில் காணப்படுகின்றது. (…..)

02. B எழுத்தினால் குறிக்கப்படும் அமராவதிக் கலைமரபில் புடைப்பு முறையில் நுட்பமான, ஒப்புரவான, கவர்ச்சியான சந்தத்துடன் செதுக்கப்பட்ட சிற்பச் செதுக்கல் குறிப்பது,

1. நாளாகிரி யானையை அடக்குதல்.
2. அங்குலிமாலாவை அடக்குதல்.
3. மாயாதேவியின் கனவு.
4. புத்தர் இல் வாழ்கையைத் துறத்தல்.
5. ராகுல இளவரசன் வரம் கேட்டல். (…..)

03. C எழுத்தினால் குறிக்கப்படும் தூண் ஒன்றில் வட்டத்தினுள் செதுக்கப்பட்டிருக்கும் படைப்பானது,

1. புத்தபெருமான் சங்கிஸ்ஸபுரத்திற்கு வருகைதரும் நிகழ்வைக் காட்டும் சாஞ்சி செதுக்கலாகும்.
2. புத்தபெருமான் சங்கிஸ்ஸபுரத்திற்கு வருகைதரும் நிகழ்வைக் காட்டும் பாரூத் செதுக்கலாகும்.
3. மகாமாயா தேவியின் கனவு என்னும் நிகழ்வைக்காட்டும் பாரூத் செதுக்கலாகும்.
4. அமராவதியில் கிடைக்கப்பெற்ற புத்தபெருமான் சங்கிஸ்ஸபுரத்திற்கு வருகைதரல் என்னும் செதுக்கலாகும்.
5. புத்தபெருமானைக் காட்டுவதற்கு அரசமரத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாரூத் செதுக்கலாகும். (…..)


04. D எழுத்தினால் குறிக்கப்படும் அரைப்புடைப்பு நுட்பமுறையில் இலங்கையின் பிரசித்தி பெற்ற சந்திரவட்டக்கல்


1. பொலநறுவை வட்டதாகே சந்திரவட்டக்கல்லைக் குறிக்கின்றது.
2. தலதாமாளிகை சந்திரவட்டக் கல்லைக் குறிக்கின்றது.
3. ருவான்வெலிசாய சந்திரவட்டக் கல்லைக் குறிக்கின்றது.
4. இராணி மாளிகைச் சந்திரவட்டக் கல்லைக் குறிக்கின்றது.
5. ஜேதவன தாதுகோப சந்திரவட்டக் கல்லைக் குறிக்கின்றது. (…..)


05. E எழுத்தினால் குறிக்கப்படும் மாமல்லபுரச் செதுக்கலின் ஒரு பகுதியினால் வெளிப்படுத்தப்படுவது சிவபெருமான்,

1. ஆகாய கங்கையை உருவாக்க முனைகின்றமை.
2. தனது பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றமை.
3. பகீரத முனிவரால் ஆகாயகங்கையை உருவாக்கித் தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றமை.
4. அர்ச்சுனனின் தவவலிமை ஆராயப்படுகின்றது.
5. பகீரத முனிவரைக் கடிந்துரைக்கின்றமை. (…..)

- 06 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை K,L,M,N,O,P,Q எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியப்பகுதியில் இருந்து தெரிவு செய்க.


K



L


M


N


O


P


Q

06. அஜந்தாக் குகை ஓவியங்களை குறித்து நிற்கும் எழுத்துக்கள் யாவை?

1.K , P　　2. N, O　　3.P,O　　4.N,P　　5.O,K　　(…..)

07. பொலநறுவைக் காலப்பகுதிக்குரிய ஓவியங்கள் யாவை?

1.K,P　　2.M,N　　3. L,M　　4.P,L　　5.P,M　　(…..)

08. இலங்கையில் வரையப்பட்ட கி.பி 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியம்

1. K　　2.O　　3. M　　4. N　　5.L　　(…..)

09. இலங்கையின் தாழ்நில விகாரைச் சித்திரம் எது?

1. K　　2. N　　3. Q　　4. P　　5. M　　(…..)

10. கண்டிய மரபுக்குரிய மெதவெல டெம்பிட்ட விகாரையில் வரையப்பட்ட ஓவியம்

1. K　　2. L　　3. N　　4. M　　5. O　　(…..)

- 11 தொடக்கம் 15 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்க.

11. அக்கடமிக் யதார்த்த வாதத்திற்கு எதிரான "பூனையும் சிங்கராலும்" என்னும் படைப்பானது,

1. ஜெமினிரோய் தனக்கேயுரிய கலைநுட்பத்துடன் வரைந்த ஓவியமாகும்.
2. இந்தியாவின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டும் நந்தலால் போஸ்சின் நிர்மாணிப்பாகும்.
3. அபனீந்திரநாத் தாகூரினால் இந்தியாவின் தனித்துவம் சித்திரிக்கப்படும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்பாகும்.
4. இந்தியாவின் நவீன கலைஞரொருவரின் கலைநுட்பம் நிறைந்த நிர்மாணிப்பாகும்.
5. இந்திய இயல்புகளைச் சித்திரிக்கும் அமிர்தா ஷேர்கிலின் நிர்மாணிப்பாகும்.　　(…..)

12. பெண் ஓவியரான மேரி கசாற்றினால் வரையப்பட்ட தலைமயிரை சீர்செய்யும் சிறுமியின் படைப்பானது,

1. பிற்பட்ட மனப்பதிவுவாதக் கலைஞர் ஒருவரின் ஓவியமாகும்.

2. மனப்பதிவுவாதக் கலைஞர் ஒருவரின் ஓவியமாகும்.

3. அரூபவாதக் கலைஞர் ஒருவரின் ஓவியமாகும்.

4. அதியதார்த்தவாதக் கலைஞர் ஒருவரின் ஓவியமாகும்.

5. கனவடிவவாதக் கலைஞர் ஒருவரின் ஓவியமாகும். (…..)

13. சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட அதிகமான சிற்பங்கள் அமைக்கப்பட்ட ஊடகம்,

1. அப்புதல் நுட்பமுறையைப் பயன்படுத்திய சுடுமண் சிற்பங்கள்.

2. செதுக்கல் நுட்பமுறையில் ஆக்கப்பட்ட மரச் சிற்பங்கள்.

3. வார்த்தல் தொழில் நுட்பத்தில் செய்யப்பட்ட உலோகச்சிற்பங்கள்.

4. பொழிதல் நுட்பமுறையிலான கருங்கற் சிற்பங்கள்.

5. கட்டியெழுப்புதல் நுட்பமுறையிலான சீமெந்து சிற்பங்கள். (…....)

14. "நடனமாது" (சந்திரலேகா) எனப் பெயரிடப்பட்டுள்ள ஓவியத்தை நிர்மாணித்தவர் யார்?

1. ஜே.டீ.ஏ.பெரேரா  2. ஏ.சி.ஜீ.எஸ்.அமரசேகரா

3. ரியூடர் ராஜபக்ஷ  4. டேவிட் பெயின்ரர்

5. ஹரி பீரிஸ் (…....)

15. ஹிந்தகல குகை விகாரையின் பாறைச் சுவரில் வரையப்பட்டிருந்த 7ஆம் நூற்றாண்டுக்குரியதும் இன்று அழிந்த நிலையில் உள்ளதுமான சித்திரத்தின் மூலம் சித்திரிக்கப்படுவது,

1. சக்கர தெய்வத்தால் அளிக்கப்பட்ட தானத்தை ஏற்பதற்கு புத்தபெருமான் ஆயத்தமாகும் தன்மையாகும்.

2. புத்தபெருமான் துசித்த தேவாலயத்திற்குச் சென்று திவ்யராஜாவுக்கு தர்ம உபதேசம் செய்கின்ற சந்தர்ப்பமாகும்.

3. தபஸ்சு, பல்லுக இரு வியாபாரிகள் பொரியும் தேனும் பூஜிப்பதையும் சம்பதி பிராமணன் தர்ம போதனைகளுக்காக புத்தரை அழைப்பதையும் இவ்வோவியங்கள் குறிக்கின்றன.

4. புத்தபெருமான் தேவலோகத்தில் இருந்து இந்திரஜாலக் குகைக்கு வருகைதந்த சந்தர்ப்பமாகும்.

5. புத்தபெருமான் இந்திரஜாலக் குகைக்கு வருகைதந்து இளைப்பாறிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பமாகும். (…....)

● **16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச்சரியான விடையை F,G,H,I,J எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் சிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**


F


G


H


I


J

16. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிவ பிச்சாதன மூர்த்திச் சிலையானது,

1. சோழ சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன.
2. அமராவதி சிற்ப முறை அம்சங்கள் கலந்துள்ளன.
3. குப்த சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன.
4. பல்லவ சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன.
5. பாண்டிய சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன. (…....)

17. G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள காந்தார பண்புகளை வெளிப்படுத்தி நிற்பது,

1. தக்திபஹிர் புத்தர் சிலையாகும்.
2. சஹரீ பக்லொள் புத்தர் சிலையாகும்
3. கத்ரா புத்தர் சிலையாகும்.
4. பேஹும் புத்தர் சிலையாகும்
5. ஹோடிமன்தார் புத்தர் சிலையாகும். (…....)

18. H எழுத்தால் காட்டப்பட்டுள்ள சிற்பக்கலையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்திய ஹென்றி மூவரின் சிற்பங்களில் வெளிப்படுத்தப்படும் அம்சம்.

1. கிரேக்க சிற்பங்களின் சாயல் வெளிப்படுத்தப்படல்
2. எகிப்திய சிற்பங்களின் தன்மைகள் காணப்படல்
3. யதார்த்த வடிவத்திற்குப் பதிலாக அருப வடிவம் பயன்படுத்தப்படல்.
4. மனிதசரீரத்தின் பிரமாணத்திலும் பார்க்க பெரிய அளவுடைய தலை காணப்படல்.
5. இங்கு மனித வடிவங்கள் இயற்கை வடிவில் காணப்படல். (…....)

19. I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சாரநாத் புத்தர் சிலையானது .

1. புத்தர் கடும் தவம் செய்யும் சந்தர்ப்பத்தை காட்டுகின்றது.
2. புத்தர் ஞானம் பெற்ற பின் தம் சீடர்களுக்கு செய்த முதல் தர்ம உபதேசத்தைக் குறிக்கின்றது.
3. புத்தருக்கு சுஜாதாதேவி பாற்சோறு வழங்கும் சந்தர்ப்பத்தைக் குறிக்கின்றது.
4. பௌத்த இலக்கியத்தில் வருகின்ற ஒரு சந்தர்ப்பத்தை வெளிப்படுத்துகின்றது.
5. புத்தரின் பரிநிர்வாண நிலையை காட்டுவதாகும். (…....)


20. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மென்குரே அரசனதும், அரசியினதும் சிலை,

1. கிரேக்கத்தின் மேன்மை காலத்தின் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
2. எகிப்திய புதிய இராசதானிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
3. கிரேக்கத்தின் ஹெலனிஸ்ட் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
4. எகிப்திய பண்டைய இராசதானிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
5. உரோமானிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அரச வம்சத்தின் சிலையாகும். (…....)

- **21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையை கீழே தரப்பட்டுள்ள நிழற்படங்களை ஆதாரமாகக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.**


R


S


T


U


V

21. R என்ற எழுத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை எங்கு காணலாம்.

1. இளம் யுவதி உருவத்தை இயற்பண்புவாதம் வெளிப்படும் விதத்தில் மரப்பலகை மீது வரையப்பட்ட உரோமானிய ஓவியமொன்றாகும்.
2. பெண் உருவத்தை இயற்பண்புவாதம் வெளிப்படும் விதத்தில் சுவரில் மீது வரையப்பட்ட ஓவியமொன்றாகும்.
3. யுவதி உருவத்தை யதார்த்தபண்புவாதம் வெளிப்படும் விதத்தில் தூணில் வரையப்பட்ட கிரேக்க ஓவியமொன்றாகும்.
4. இளம் யுவதி உருவத்தை பிரமிட்களில் உட்பக்கச் சுவரில் வரையப்பட்ட எகிப்திய ஓவியமொன்றாகும்.
5. பெண்ணின் நளினத்தையும் இயற்பண்புவாத வெளிப்பாட்டு மரபில் கன்வஸ் துணியில் வரையப்பட்ட ஐரோப்பிய ஓவியமொன்றாகும். (…....)

22. S எழுத்து மூலம் காட்டப்படும் அம்ரிதா சேர்கிளின் ஆக்கமானது ,

1. ராஜபுத்தான ஓவிய சாயலும் நவீன தன்மையும் கொண்டதுமாகும்.

2. கோத்திரக் கலைகளை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டவையாகும்.

3. சமய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டதாகும்.

4. நாளாந்த வாழ்க்கைச் செயற்பாட்டை தொனிப் பொருளாகக் கொண்டு வரையப்பட்டதாகும்.

5. யதார்த்த முறையில் மொகலாயக்கலை சாயலைக் கொண்டு வரையப்பட்டதாகும். (…....)

23. T என்னும் எழுத்து குறித்து நிற்கும் படைப்பானது,

1. வசிலி கன்டிண்ஸ்கியினால் வரையப்பட்ட முற்றுமுழுதான அரூப ஓவியமாகும்.

2. பியற் மொன்றினால் வரையப்பட்ட முற்றுமுழுதான நவீன ஓவியமாகும்.

3. போப்பாண்டவர் இல்லத்தில் பிக்காசோவினால் வரையப்பட்ட முற்றுமுழுதான அரூப ஓவியமாகும்.

4. H.A கருனாரத்தினவால் வரையப்பட்ட முற்றுமுழுதான அரூப ஓவியமாகும்.

5. மனப்பதிவுவாத ஓவியரால் வரையப்பட்ட நவீன ஓவியமாகும். (…....)

24. U என்னும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியமானது,

1. மனப்பதிவு வாத ஓவியர் எட்காட் டெகாவினால் வரையப்பட்ட கடற்கன்னியின் நடனம் என்னும் படைப்பாகும்.

2. H.A கருணாரத்தினவால் வரையப்பட்ட கியூபிஸம் மற்றும் காட்டுவிலங்கு வாத மரபுகளில் வரையப்பட்ட கடற்கன்னியின் நடனம் என்னும் படைப்பாகும்.

3. ஸ்ரான்லி அபெயசிங்கவினால் கியூபிஸம், காட்டுவிலங்கு வாதம், பின்மனப்பதிவு வாதம், வெளிப்பாட்டு வாத மரபுகளில் வரையப்பட்ட கடற்கன்னியின் நடனம் என்னும் படைப்பாகும்.

4. றிச்சட் கப்ரியேலினால் கியூபிஸம், காட்டுவிலங்கு வாதம், பின்மனப்பதிவு வாதம், வெளிப்பாட்டு வாத மரபுகளில் வரையப்பட்ட படைப்பாகும்.

5. சுமண திஸநாயக்காவினால் பின்மனப்பதிவு முறையில் வரையப்பட்ட கடற்கன்னியின் நடனம் என்னும் படைப்பாகும்.

(…....)

25.V என்னும் எழுத்து மூலம் காட்டப்படும் இவ் ஓவியத்தில்

1. ஜோஜ்கீற்றின் பௌத்த விகாரைத் தழுவலை அடிப்படையாகக் கொண்டு கோதமி விகாரையில் வரையப்பட்ட படைப்பாகும்.

2. இந்து சமய இலக்கியக் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட வீமனும் ஜராசந்தனும் என்ற ஜோஜ்கீற்றின் படைப்பாகும்.

3. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக லித்தோ அச்சுமுறையினை அடிப்படையாகக் கொண்ட வீமனும் ஜராசந்தனும் என்ற படைப்பாகும்.

4. பிக்காசோவின் நவீன ஓவியக்கலைத் தழுவலை அடிப்படையாகக் கொண்டு களனி விகாரையில் வரையப்பட்ட படைப்பாகும்.

5. சோமபந்து வித்தியாபதியின் விகாரைத் தழுவலை அடிப்படையாகக் கொண்ட யமனை வெற்றி கொள்ளல் என்ற படைப்பாகும்.

(…....)

- **26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

26. இலங்கையின் பாரம்பரிய குகை ஓவியர்கள் மனிதர்களினதும் விலங்குகளினதும் உருவங்களை வரையும் போது,

1. குறியீட்டு அடிப்படையில் எளிமையான அடிப்படை இயல்புகளை எடுத்துக் காட்டியுள்ளனர்.

2. உயிரியல் அளவை விடப் பெரிதாக்கி வரைவதற்கு முயற்சி செய்துள்ளனர்.

3. தொடர்பாடல் செய்முறை ஒன்றிற்குப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தியுள்ளனர்.

4. பலாங்கொட மனிதனின் வாழ்வியலை எடுத்துக்காட்டுவதற்கு முயற்சி செய்துள்ளனர்.

5. முழுமையான, யதார்த்தபூர்வமான உடலம்சங்களை நேர்த்தியாகப் பூரணப்படுத்த முயற்சி செய்துள்ளனர். (…....)

27. மொகலாய, ராஜ்புத்தான ஆகிய பெயர்களினால் அறியப்படும் ஓவிய மரபுகள் இரண்டும்,

1. ஒன்றுக்கொன்று சமமான தொனிப்பொருள்களில் ஓவியங்கள் வரையப்பெற்ற சமகால நிறுவனங்களாகும்.

2. மொகலாய மன்னர்களால் இந்தியாவின் மத்திய, மலைநாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கலை நிலையங்களாகும்.

3. சமயத் தொனிப்பொருளையும் லௌகீகத் தொனிப்பொருளையும் சித்திரிப்பனவாகும்.

4. அரச தகவல்களையும் சமூகத் தகவல்களையும் சித்திரிப்பனவாகும்.

5. அரச தொனிப்பொருளையும் இந்துசமய இலக்கியத் தொனிப்பொருளையும் சித்திரிப்பனவாகும். (…....)

28. மைக்கல் அஞ்சலோவினால் வரையப்பட்ட “இறுதித்தீர்ப்பு“ என்னும் ஓவியம்

1. புனித மரியாள் டிலா கிரேசி கன்னியர் மடத்தின் போசனசாலையில் வரையப்பட்ட ஓவிமாகும்.
2. வத்திக்கானில் பிரஸ்கோ நுட்பமுறையில் படைக்கப்பட்ட மிகப்பெரிய ஓவியமாகும்.
3. சிஸ்ரெயின் தேவாலயத்தில் பலிபீடத்திற்குப் பின்னால் பெரஸ்கோ புவனா நுட்முறையில் வரையப்பட்ட மிகப்பெரிய ஓவியமாகும்.
4. லூவர் அரும்பொருட்காட்சியகத்தில் கன்வஸ்துணியில் எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட ஓவியமாகும்.
5. 2ம் யூலியஸ் பாப்பரசரின் கல்லறைக்காக வரையப்பட்ட அற்புதமான படைப்பாகும். (…....)

29. கட்புலக் கலையின் யதார்த்தச் சித்தரிப்பு (Realism) என்பது

1. தூரதரிசனக் கோட்பாடுகளைச் சரியாகப் பயன்படுத்துதலாகும்.
2. இயற்கையில் காணப்படும் உயிருள்ள, உயிரற்றவற்றின் பண்புகளை உள்ளவாறே சித்தரித்தலாகும்.
3. சாஸ்திரத்தின் அடிப்படை விதிகளைப் பின்பற்றுதலாகும்.
4. விருத்தியுற்ற அழகியல் கோட்பாடுகளுக்கமைய மனித உருவங்களைச் சித்திரித்தலாகும்.
5. அழகியல் கோட்பாடுகளுக்கமைய அனைத்தையும் சித்திரித்தலாகும். (…....)

30. உற்பத்திப் பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்படும் சுவரொட்டியொன்றில் மிக முக்கியமாக அமைவது.

1. தொனிப்பொருளுக்குப் பொருத்தமான சுருக்கமான வாசகமொன்றை பயன்படுத்துதலாகும்.
2. குறியீட்டு ரீதியான உருவங்களை தளத்துக்கும் வெளிக்கும் பொருந்தும் விதத்தில் திட்டமிடுதலாகும்.
3. வடிவங்களையும் வர்ணங்களையும் குறியீட்டு ரீதியாக பயன்படுத்துதலாகும்.
4. நோக்கங்களை எளிமையாகவும், சிக்கலின்றியும் அர்த்தமுள்ள விதத்திலும் விரைவாக விளக்கும் வகையில் வெளிப்படுத்தல் ஆகும்.
5. சிறந்த நிறைவைக் கொண்டதாக வர்ணமயமாக நிர்மாணித்தலாகும். (…....)

● **31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு அருகிலுள்ள கட்டடக்கலை நிர்மானிப்புக்களின் உருவப்படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**



31. அருகில் காட்டப்பட்டுள்ள பிரமாண்டமான தேவாலயம்,
1. 2ஆவது ராம்சேஸ் மன்னனின் தேவாலயமாக நைல் நதிப் பள்ளத்தாக்கில் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயம்.
2. விசாலமான பைப்பிரஸ் மரத்தின் மாதிரி அமைப்பைக் கொண்ட கர்ணாக் தேவாலயம்.
3. விசாலமான மலையை குடைந்து நிர்மாணிக்கப்பட்ட அபுசிம்பல் தேவாலயம்.
4. முக்கோண, சதுர வடிவமைப்பு சுவர்களைக் கொண்ட எட்பு தேவாலயம்.
5. வெற்றி கொண்ட நிகழ்வுகளை செதுக்கல்களாகவுள்ள பெஹெலி தேவாலயம். (…....)

32. அருகில் காட்டப்பட்டுள்ள தூண்களைக் கொண்ட கட்டட எச்சமானது,



1. பழமையான உரோமானிய ரஜன் வெற்றித் தூண் வளைவாகும்.
2. எகிப்திய கட்டடக்கலையின் லக்ஷோர் தேவாலய நிர்மாணிப்பாகும்.
3. கிரேக்க கட்டடக்கலையில் காணப்பட்ட புறப்பலியா தேவாலயமாகும்.
4. கிரேக்க கட்டடக்கலையில் ஒலிம்பியா தேவாலய எச்சமாகும்.
5. கிரேக்க கட்டடக்கலையில் பாதினன் தேவாலய எச்சங்களாகும். (…....)



33. அருகில் காட்டப்பட்டுள்ள நினைவுச் சின்னம்,
1. தலைப் பகுதிகள் சந்தனக் கற்களால் செதுக்கப்பட்டுள்ள லௌரியா நன்தன்கார் கற்றூண் செதுக்கலாகும்.
2. புத்தரின் பிறப்பிடத்தைக் குறிக்கும் கதீரா தூணின் பகுதி ஆகும்.
3. மௌரியர் காலத்து கற்றூண்களின் ராம்புர்வா என்னும் இடத்திலுள்ள தூண் பகுதி.
4. அசோகத் தூண்களில் 32’9” கொண்ட சாரனாத் தூணாகும்.
5. நான்கு எருதுகளின் சிதைவுகளுடன் காணப்படும் சோம்பூர் தூணாகும். (…....)

34. அருகில் உள்ள இக்கட்டிடம்,



1. கம்பளைக் காலத்தில் கடலாதெனிய விகாரையில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட விஜயோத்பாய கட்டிடமாகும்.
2. இலங்காதிலக விகாரையில் ஸ்தபதிராஜர் என்ற தென்னிந்தியக் கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
3. எம்பக்கே தேவாலயத்தில் நீள் மண்டபத்திற்கு அருகில் காணப்படும் இந்து ஆலயமாகும்.
4. கற்பாறையின் மீது செங்கல்லும் சாந்தும் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட பௌத்த ஆலயமாகும்.
5. 24 அடி உயரமுடைய கூரை அமைப்பைக் கொண்ட களனி விகாரைத் தொகுதியாகும்.

(…....)

35. நீருடன் தொடர்புடைய இக்கட்டடக் கலை குறிப்பது,



1. மேலிருந்து கீழ்நோக்கி செல்கையில் இதழ்கள் சிறிதாகும் பொலநறுவை பொய்கையாகும்
2. தங்கமீன் பூங்காவில் காணப்படும் பொய்கையாகும்.
3. பராக்கிரமபாகு அரண்மனை தோட்டத்தில் காணப்படும் சீலபொக்கராணி பொய்கையாகும்.
4. கருங்கற்களால் அமைக்கப்பட்ட குமார பொய்கையாகும்.
5. அநுராதபுரத்தில் காணப்படும் குட்டம் பொக்குண (இரட்டைக் குளம்) ஆகும். (…....)

- **36 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையை பின்வரும் ஓவியத்தினைப் பயன்படுத்தி தெரிவு செய்க.**



36. இவ் ஓவியத்தினை வரைந்தவர்

1. எட்கா டெகா  2. வின்சன்ட் வான்கோ  3. மேரி கசற்
4. குளோட் மொனே  5. போல் கொகான்

(…....)

37. இச்சித்திரத்தில் சித்தரிக்கப்படுவது.

1. வீடொன்றினுள் உல்லாசப்பயணிகள் மதிய போசன விருந்து உண்பதாகும்.

2. மதிய போசன விருந்து ஒன்றில் மது அருந்தும் உல்லாசப் பயணிகளாகும்.

3. மதியபோசன விருந்து ஒன்றில் கலந்த சக்கரவர்த்திகளைக் காட்டுவதாகும்.

4 வீடொன்றினுள் ஐந்து பேர் உருளைக்கிழங்கு புசிக்கும் சந்தர்ப்பமாகும்.

5. புல்வெளியில் மதிய போசனத்தில் ஈடுபட்டுள்ள பிரபுக்களாகும். (…....)

38. இங்கு காணப்படும் இச் சித்திரமானது.

1. அரூபவாத சித்திரமாகும் 2. கனவடிவவாத சித்திரமாகும்

3. மனப்பதிவுவாத சித்திரமாகும் 4. பிற்பட்ட மனப்பதிவுவாத சித்திரமாகும்

5. அகவய யதார்த்த வாதச் சித்திரமாகும். (…....)

39. இவ் ஓவியம் வரையப்பட்ட ஊடகம்,

1. பொப்லர் மரப்பலகையில் பஸ்ரல் வர்ணத்தைக் கொண்டு வரையப்பட்டதாகும்.

2. கன்வஸ் துணியின் மீது எண்ணெய் வர்ணத்தைக் கொண்டு வரையப்பட்டதாகும்.

3. டொமினிக்கன் நகரின் வீட்டுச் சுவரில் எண்ணெய் வர்ணத்தைக் கொண்டு வரையப்பட்டதாகும்.

4. கொம்போ ஆலயத்தில் எண்ணெய் வர்ணத்தைக் கொண்டு வரையப்பட்டதாகும்.

5. துணியொன்றில் மீது சாயத்தைக் கொண்டு வரையப்பட்டதாகும். (…....)

40. இச் சித்திரத்தின் வர்ணப் சிறப்பு,

1. தூரிகைத் தடங்களின் மூலம் பிரகாசமான வர்ணங்கள் காணப்படுகின்றன.

2. வர்ணங்களை நேரடியாக பிரயோகிக்கப் பட்டிருந்தன.

3. அயல் வர்ணங்களை புள்ளியாகப் பயன்படுத்தி காணப்படுகின்றன.

4. வர்ணங்களை தட்டையான முறையில் பயன்படுத்தப்பட்டமை ஆகும்.

5. மங்கிய ஒளியிலும் தன்மையிலும் தொல்சீர் தனிவர்ணப் பயன்பாடு காணப்படுகின்றன. (…....)

(40x1=40 புள்ளிகள்)

பகுதி II

## பகுதி ' அ'

**(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)**

**1. இலங்கையில் அமைக்கப்பட்ட பௌத்த, இந்து கட்டிடக்கலை நிர்மாணிப்புகளின் பண்புகள் அக்காலத்திலும் பிற்காலத்திலும் நிர்மாணிக்கப்பட்ட ஏனைய அம்சங்களில் பிரதிபலிப்பதை காணக்கூடியதாக உள்ளது.**

(1) அனுராதபுர காலப்பகுதியில் அமைக்கப்பட்ட பௌத்த தாதுகோபங்கள் இரண்டினையும் அவற்றின் வடிவங்களையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(2) பொலநறுவைக்காலத்தில் நிஸங்கலதா மண்டபத்தின் கலைத்துவ அம்சங்கள் பற்றி சுருக்கமாகத் தருக. (05 புள்ளிகள்)

(3) இந்து கட்டிடக்கலைப்பண்பானது கம்பளை காலத்து சிலைமனைகளில் செல்வாக்கு செலுத்தியுள்ள விதத்தினை உதாரணத்துடன் விளக்குக. (08 புள்ளிகள்)

**2. சுவர் ஓவியக் கலையில் விசேடமான பங்களிப்பை கண்டியகாலத்து சித்திரக் கலை வழங்கியுள்ளது. எனினும் தாழ்நில விகாரை ஓவியங்களில் பல்வேறு மாற்றங்களை அவதானிக்க முடிகின்றது.**

(1) பொலநறுவைக்கால ஓவியங்கள் காணப்படும் இடங்கள் இரண்டினைத் தருக.

(02 புள்ளிகள்)

(2) அனுராதபுரகால ஓவியக் கலைப் பாணிக்குரிய ஓவியப் பண்புகளை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(3) அந்நியரின் வருகையினால் தாழ் நிலப் பிரதேசங்களின் ஓவியங்களுக்கும் மலைநாட்டு ஓவியங்களுக்கும் இடையிலான கலைப்பாணி மாற்றங்களின் ஒத்த, எதிர்ப் பண்புகளை ஒப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

**3. பண்டைய கருங்கற் செதுக்கற் படைப்புக்கள் அக்கால மக்களின் கலைத்திறனுக்கு சான்றாக காணப்படுகின்றது.**

(1) அனுராதபுர காலத்து புடைப்புச் சிற்பங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(2) பொலநறுவைக்கால கல்விகாரையில் மகாயான பௌத்த மதத்தின் செல்வாக்கினை சிலைகள் ஊடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(3) எம்பக்கே தேவாலயச் சிற்பங்களின் நிகழ்வுகளையும் எண்ணக்கருக்களையும் அறிமுகப்படுத்தி அவை வெளிப்படுத்தியுள்ள கலைப்பெறுமானங்களை பின்வருவனவற்றின் ஊடாக விளக்குக. (08 புள்ளிகள்)

(அ) கட்டடக்கலை சார்ந்த அமைப்புக்கள்

(ஆ) நீள் மண்டபமும் கட்டடக்கலை நுட்பங்களும்

(இ) சித்திரிக்கப்பட்டுள்ள செதுக்கல் வகைகள்

(ஈ) கலைப் பெறுமதி

## பகுதி ‘ ஆ’

**(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)**

**4. இந்து நதிக்கரை நாகரிக ஆய்வுகளுக்கேற்ப அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் முன்னேற்றகரமான முறையான நகரத்திட்டமிடலுடன், கலையுணர்வு மிக்கவர்களாக வாழ்ந்திருப்பது தெரியவருகின்றது.**

(1) இந்து நதிக்கரை நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட கலைப்படைப்புக்களில் கிரேக்கச்சிற்பங்களின் தரத்திற்குச் சமமான ஆக்கச்சிறப்புடன் காணப்படும் சிற்பங்கள் 2 தருக. (02 புள்ளிகள்)

(2) இந்து நதிக்கரை கலை ஆக்கங்களுள் சிறப்புப் பெறும் முத்திரைகள் அக்காலத்தில் பல்வேறு விடயங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கூற்றைச் சுருக்கமாக நிரூபிக்குக. (05 புள்ளிகள்)

(3) இந்து நதிக்கரை அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இரு நகரங்களில் வாழ்ந்த மக்களுக்காக மிக முன்னேற்றகரமான, சுகாதார வசதியும், முறையான நகரத்திட்டமிடலும் கொண்ட கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையை உதாரணங்களுடன் விபரிக்குக. (08 புள்ளிகள்)

**5. அஜந்தாவில் அமைந்துள்ள குகைகளில் பெரும்பாலான குகைகள் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.**

(1) அஜந்தா குகைகளில் மிகப்பழமையான ஓவியங்கள் காணப்படும் குகைகள் 2 தருக. (02 புள்ளிகள்)

(2) அஜந்தா ஓவியங்களின் கலைத்துவப் பண்புகள் பற்றி சுருக்கமாகத் தருக. (05 புள்ளிகள்)

(3) அஜந்தாவின் 16ம், 17ம் குகைகளில் காணப்படும் ஓவியங்களில் புத்தசரிதையை விளக்கும் ஓவியம் ஒன்றையும், வரலாற்றுக்கதையைச் சித்தரிக்கும் ஓவியம் ஒன்றையும் குறிப்பிட்டு அவ்ஓவியங்களின் சித்திர ஒருங்கிணைப்பு, நுட்பமுறை, உணர்ச்சி வெளிப்பாடு, வர்ண உபயோகம், கலைத்துவப் பண்புகள் பற்றி மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

## பகுதி ‘ இ’

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6. உலகிற்கு நாகரீகத்தை கற்றுக்கொடுத்த எகிப்திய, கிரேக்க, உரோம கலையம்சங்கள் மறுமலர்ச்சிக்காலம் வரை வியாபிக்க காரணமாகவிருந்தது.**

(1) உரோமானிய கலை அம்சங்களில் காணப்படும் ஓவியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(2) எகிப்தின் தொன்மையான ஆட்சிக் காலத்தில் படைக்கப்பட்ட சிலைகளின் பொதுப்பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(3) எகிப்திய நாகரீகத்தின் பிரமிட்டுக்கள் ஊடாக கட்டட நிர்மாணிப்பு மற்றும் கலைத்துவப் பண்புக்களை விளக்குக. (08 புள்ளிகள்)

**7. நவீன ஓவியக் கொள்கைகள் ஐரோப்பாவில் தோன்றி உலக நாடுகளிற்கு பரவிச் சென்றமை ஓவியக்கலையின் பெரும் புரட்சியாகும்.**

(1) அரூபவாத கலைஞர் இருவரைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(2) மனப்பதிவுவாத கலையின் அடிப்படைப் பண்புகளை சுருக்கமாக விளக்குக

(05 புள்ளிகள்)

(3) மீயதார்த்தவாதப் (Surrealism) பண்புகளின் அடிப்படையில் ஓவியங்கள் வரைந்த கலைஞர்கள் இருவரைக் குறிப்பிட்டு, அவர்களின் ஒவ்வொரு படைப்புக்கள் ஊடாக கலைத்துவ அம்சங்களையும், பண்புகளையும் விளக்குக. (08 புள்ளிகள்)